# அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் - நோர்வே

## தேசிய மட்டத்திலான அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2023

## திருக்குறள் மனனம் ஒப்பித்தல் போட்டி - ஆண்டு 8

பின்வரும் 10 குறள்களையும் ஒப்பித்தல் வேண்டும். விரும்பிய 2 குறள்களின் பொருள் விளக்கம் கூறுதல்.

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக. (குறள் 391)

   கற்க வேண்டிய நூல்களை நாம் பிழை இல்லாது கற்க வேண்டும். அவ்வாறு கற்றதன்படி ஒழுக வேண்டும்.

2. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
   அற்றது போற்றி உணின். (குறள் 942)

   முன் உண்ட உணவு செரித்த தன்மை ஆராய்ந்து போற்றிய பிறகு தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

3. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
   தன்மையான் ஆளப் படும். (குறள் 511)

   நன்மை தீமைகளை ஆராய்ந்து அறிந்து நன்மை மட்டுமே செய்பவனைச் செயலுக்குரியவனாக அமர்த்த வேண்டும்.

4. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
   பகவன் முதற்றே உலகு. (குறள் 1)

   எழுத்துகளுக்கெல்லாம் அ என்பது முதலாக இருப்பது போல், உலகுக்கு முதலாக இருப்பது கதிரவன்.

5. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
   தெய்வத்துள் வைக்கப் படும். (குறள் 50)

   அறம் தவறாது அன்பொழுகக் கூடி வாழும் வாழ்வே இல்லறம் எனச் சிறப்பிக்கப்பட்டது.
   அதிலும் பிறர் பழிக்காதுவிட்டால் இத்தகைய இல்வாழ்வு பெருஞ்சிறப்பு மிக்கதாக இருக்கும்.

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
மாணவர்களை ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை. மாணவர்களை தயார்ப்படுத்துவது பெற்றோரினது கடமை.

இல்லறக் கடமைகளையும் பொதுக்கடமைகளையும் அறவழி தவறாது மேற்கொள்வோர் மேலுலகத்தில் உள்ள தெய்வங்களுக்கு இணையானவர்களாகப் போற்றப்படுவர்.

6. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
   நன்மை கடலிற் பெரிது. (குறள் 103)

பயன் எதையும் எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவியின் நன்மையை ஆராய்ந்தால் அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

7. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
   பெற்றத்தால் பெற்ற பயன். (குறள் 524)

சுற்றத்தால் தான் சூழப்படும்படி அவர்களைத் தழுவி வாழ்வதே ஒருவன் செல்வத்தைப் பெற்றதன் பயன் ஆகும்.

8. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
   தீமை இலாத சொலல். (குறள் 291)

வாய்மை என்று சொல்லப்படுவது யாது என்றால் பிறருக்குத் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

9. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
   வன்சொல் வழங்கு வது. (குறள் 99)

இனிய சொற்களையே பேச வேண்டும். கடுமையான சொற்களைத் தவிர்க்க வேண்டும்.

10. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
    கற்றனைத் தூறும் அறிவு. (குறள் 396)

மணல் உள்ள இடத்தில் கேணிதோண்டிய அளவிற்கேற்ப நீர் ஊறும். அதுபோல, மக்களுக்கு அவர்கள் கற்ற அளவுக்கேற்ப அறிவு பெருகும்.